# நாள் முழுவதும் பாடுங்கள்

குழந்தைகள், பிறப்பதற்கு முன்பே ஒலிகளைக் கேட்கவும், அவற்றுக்கேற்பச் செயல்படவும் தொடங்கிவிடுகின்றன. உண்மையில், தான் பிறந்ததிலிருந்து மிகச் சில நாட்களுக்குள்ளேயே, அவர்கள் தம்மைப் பெற்ற தாயின் குரலை அடையாளம் கண்டுகொள்கின்றனர். சொல்லப்போனால் அவளது பேச்சுக்குரலை அவர்கள் மாதக் கணக்காகக் கேட்டுக்கொண்டுதானே இருந்தார்கள்.

பிறர் பேச்சைப் புரிந்துகொள்ளவும், தாம் பேசுவதற்குமான இணைப்புக்கள் அவர்களின் மூளையில் பிறக்கும்பொழுதே அமைந்துள்ளன. ஆனால் பிறந்தவுடன் வரும் சில ஆண்டுகளில் மொழியைப் புரிந்துகொள்ளவும், பேசிப் பழகவும் அவர்களுக்கு நிறைய வாய்ப்புக்களும், பயிற்சிகளும் தேவைப்படுகின்றன. குழந்தைகளுக்குப் பாடல்கள் அந்த வாய்ப்புக்களைத் தருகின்றன, அவை ஒரு வகையில் அனைவருக்குமே கேளிக்கை தருகிறது.

**"குழந்தைப் பேச்சு"**

உலகம் முழுவதிலும் பெரியவர்கள் குழந்தைகளோடு பேசுவதற்குத் தனி முறை ஒன்றைப் பயன்படுத்துகின்றனர். குழந்தைகள் மிக இளையவையாக இருக்கும்பொழுது, நாம் நம் குரலை உயர்த்திக்கொள்கிறோ, எளிய சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்துகிறோ, மிக மெதுவாகப் பேசுகிறோ, சொற்றொடர்களுக்கு இடையே இடைவெளிகள் விடுகிறோ மற்றும் ஒரே தொடர்களை மீண்டும் மீண்டும், பாடல் பாடும் தொனியில் திரும்பத் திரும்பச் சொல்கிறோம்.

இவ்வகையான "குழந்தைப் பேச்சு" இளங்குழந்தைகளின் கவனத்தை ஈர்க்கிறது, ஏனெனில் கீழ் ஸ்தாயி ஒலிகளை விட உச்ச ஸ்தாயி ஒலிகளைக் கேட்கும் அவர்களின் ஆற்றலுக்கு அது ஏற்றதாக அமைகிறது. பெரியவர்கள் எளிய சொற்களைப் பயன்படுத்துவதோடு, அவற்றை மீண்டும் மீண்டும் திருப்பிச் சொல்லும்போது, குழந்தைகள், பெரியவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை எளிதில் புரிந்துகொள்கின்றன. எளிய சொற்கள், திரும்பத் திரும்பச் சொல்லுதல், கவனத்தை ஈர்க்கும் தொனி—இவைதான் பெரும்பாலான குழந்தைப் பாடல்களின் இயல்பு. உண்மையிலேயே குழந்தைகளோடு தொடர்பு கொள்வதில் பாடல்களுக்கு சிறப்பான இடம் ஒன்று உள்ளது. விளையாடும் நேரம் முதல் தூங்கும் நேரம் வரை இப்பாடல்கள் நல்ல தொடர்பை ஏற்படுத்துகின்றன. குழந்தைகள் வளரும்பொழுது இப்பாடல்களின் இன்றியமையாமையும் தொடர்கின்றது.

**சுறுசுறுப்பாகச் செயல்படுங்கள்**

பாடல்களின் சொற்களைக் குழந்தைகள் சொல்லத் தொடங்குவதற்கு முன்பே கூட, பாடல்கள் சைகைகளோடும், அசைவுகளோடும் அமையுமானால், குழந்தைகள் அப்பாடல்களில் விரைவாக இணைந்துகொள்வர். இப்பாடல்களில் பெரும்பாலானவை உடல் உறுப்புக்களின் பெயர்களைக் கொண்டுள்ளன. தொடக்கத்தில் நீங்கள், உங்கள் குழந்தையின் கைகளை, அவன் அல்லது அவளின் பல்வேறு உடல் உறுப்புக்களைச் சுட்டிக்காட்டும் வண்ணம் அசையுங்கள். பின்னர் உங்களது குழந்தை உங்கள் கை மற்றும் உடல் அசைவுகளைப் போலவே தானும் செய்து பங்கேற்கும். பிறகு படிப்படியாக, அவன் அல்லது அவள் பாடலில் இடம் பெறும் சொற்களை ஒவ்வொன்றாகச் சொல்லக் கற்றுக்கொள்ளும். இறுதியில் நீங்களும் குழந்தையும் ஒன்றிணைந்து பாடும் சூழல் உருவாகும்.

**தாளகதி, எதுகை மோனை, திரும்பக் கூறுதல்**

தொடர்புக்கு இன்றியமையாத பகுதியாகிய கேட்கும் ஆற்றலைத் தாளகதியும், பாடல்களும் வளர்க்கின்றன. தாளகதியும், எதுகை மோனைகளும் பாடல்களில் இன்றியமையாத சொற்கள் மேம்பட்டு நிற்கச் செய்வதால், அவை எளிதில் கேட்கும் வண்ணம் உள்ளது. மேலும், பெரும்பாலான பாடல்களில் ஒரு சில சொற்றொடர்கள் மீண்டும் மீண்டும் திருப்பிச் சொல்வனவாக அமைவதால், குழந்தைகள் பயில சந்தர்ப்பம் ஒன்று கிடைப்பதுடன் சொற்களையும் நினைவில் வைத்துக்கொள்ள முடிகிறது.

**தாளகதிக்கு அழுத்தம் கொடுங்கள்**

இளம் குழந்தைகளைப் பாடல் மற்றும் இசை ஈர்ப்பதற்கு முதற்காரணம் பாடலில் காணப்பெறும் தாளகதியே. ஒரு வேளை இத்தாளகதி அவர்கள் கேட்ட முதல் ஒலியான தம் தாயின் இதயத்துடிப்பை அவர்களுக்கு நினைவு படுத்தக்கூடும். இளம் குழந்தையை உங்கள் முழங்கால்களில் படுக்கவைத்துக் கால்களை அசைப்பதன் வாயிலாக அல்லது மூத்த குழந்தையாயின் கைதட்டுதல், உடலசைவுகள் போன்றவற்றால் தாளகதியை வலியுறுத்தலாம். அதற்கேற்ப நீங்களும் ஆட வேண்டுமென்று உணர்ந்தால், உங்கள் குழந்தையோடு சேர்ந்து நீங்கள் நடனம் கூட ஆடலாம்!

**பாடல்களைக் கற்பதற்கு எளிமையாக்குங்கள்**

பாடலை முதலில் மிக மெதுவாகப் பாடுவதன் வாயிலாக ஒரு புதிய பாடலைக் குழந்தைகள் கற்றுக்கொள்வதை நீங்கள் எளிமையாக்கலாம். பாடல் விரைவான தாளகதி உடையதாக இருக்கலாம், ஆனால் குழந்தைகள் பாடலை நன்கு புரிந்துகொள்ளும்வரை விரைவாகப் பாடுவதற்குக் காத்திருங்கள். குழந்தைகள் குறிப்பிட்ட பாடலை நன்கு புரிந்துகொண்டபின், நீங்கள் பாடுவதை இடைவெளி விட்டு நிறுத்தி, பாடலின் அடுத்த சொற்களை அவர்கள் பாடுமாறு செய்யலாம். பெரும்பாலும் எதுகை மோனைகள், எடுத்துக்காட்டாக ஒரு வரியின் கடைசிச் சொற்களைக் குழந்தைகள் நினைவில் வைத்துக்கொள்ளப் பெரிதும் உதவி செய்யும்.

**குறுந்தகடுகளிலிருந்து (சி.டி.) பாடல்களைக் கற்றுக்கொள்ளுதல்**

குழந்தைப்பாடல்கள் எதுவும் உங்களுக்குத் தெரியவில்லையெனில் மேலும் பாடத் தொடங்க உதவி தேவையெனில், நூலகத்திலிருந்து குழந்தைப்பாடல் குறுந்தகடுகளைப் பெற்றுப் பயன்படுத்தலாம். ஆனால் குறுந்தகட்டில் உள்ள பாடலைக் கேட்பதோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் கூடுதல் நேரம் செலவழித்து, அப்பாடலைக் குழந்தைகளோடு சேர்ந்து பாடக் கற்றுக்கொள்ளுங்கள். உங்கள் குரல் வளமுடையதாக இல்லாவிட்டாலும், உங்களால் உங்கள் குழந்தையின் வயது, ஆர்வத்திற்கு ஏற்பப் பாட முடிவது போல் பதிவு செய்த பாடல் எவையாலும் தன்னை மாற்றிக்கொள்ள முடியாது.

**புதிய பாடல்களை இயற்றுதல்**

குழந்தைகளின் பெயர்களைப் பாடலில் பயன்படுத்துவது, அவர்கள் கவனத்தை ஈர்ப்பதற்கான ஒரு வழியாகும். உங்களது வழக்கமான நடைமுறைகள் மற்றும் செயல்பாடுகளோடு உங்கள் பாடல் பொருந்தும் வண்ணம் நீங்கள் புதிய சொற்களை இணைத்துப் பாடல்கள் இயற்றலாம். உதாரணத்திற்கு, நண்பர் ஒருவரின் வீட்டிலிருந்து புறப்படும்பொழுது, உங்கள் குழந்தைக்கு விருப்பமான பாடல் ஒன்றின் இசையில், "இது வீடுசெல்லும் நேரம், சொல்லுங்கள் அனைவருக்கும் வணக்கம்" எனப் பாட முயலுங்கள். சில குழந்தைகள் ஒரு செயலில் இருந்து, மற்றொரு செயலுக்கு மாறுவதை மிக மன அழுத்தம் தரும் செயலாகக் கருதுவர். புதிதாகப் புனையப்பெற்ற இது போன்று இயற்றப்பட்ட பாடல், மனநிலையை மாற்றவும், அடுத்து நிகழப்போகும் செயல் குறித்த அறிகுறிகளை உணர்த்தவும் உதவும்.

ஆணைகள் இடுவதைவிட, ஒரு பாடல் பல நேரங்களில் நல்ல விளைவுகளை உருவாக்கும். சாப்பாட்டு நேரம் என்பதை, குழந்தைக்குப் பழக்கமான ஒரு பாடலின் இசையில், "உங்களுக்குப் பசித்தால், அதை நீங்கள் அறிந்தால், வாருங்கள் வந்து உண்ணுங்கள்" எனப் பாடி அறிவிக்க முயலுங்கள்.

**அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் பாடல்கள்**

வாழ்க்கையின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் பாடல்கள் உள்ளன: நமக்குப் பழக்கமான செயல்பாடுகளை விளக்குவதற்கு, அன்றாட நடைமுறைகளை சுமூகமாக நடத்திச்செல்லுவதற்கு, மோசமான மனநிலையை மாற்றுவதற்கு, உறங்குவதற்கு முன் ஓய்வெடுப்பதற்கு. இசையைப் பகிர்ந்துகொள்ளுதல் இணைப்புக்களை இறுகச் செய்வதோடு ஒவ்வொருவரின் வாழ்நாளிலும் நல்ல நேரங்களை அதிகரிக்கும்.

*Betsy Mann*

# Passer la journée en chantant

Les enfants entendent et réagissent aux sons avant même leur naissance. En fait, aux premiers jours de sa vie, un bébé reconnaît la voix de sa mère. Après tout, il l'écoute parler depuis déjà des mois.

Les connexions déjà établies dans le cerveau aideront les enfants à comprendre et à parler. Durant les années qui suivront, ils auront besoin de nombreuses occasions d'entendre le langage et de s'exercer à parler. Avec les chansons, on offre de ces occasions qui sont plaisantes à la fois aux enfants et aux adultes.

## Parler « bébé »

Partout au monde, les adultes semblent parler aux bébés d'une manière particulière. Quand ils sont tout petits, nous utilisons un ton aigu, des mots et des phrases simples et nous parlons lentement. Nous faisons des arrêts entre les phrases et nous répétons les mêmes phrases encore et encore, souvent sur un ton chantant.

Cette façon de parler « bébé » attire l'attention des poupons parce qu'elle correspond à leur capacité d'entendre mieux les tons aigus que les tons graves. Les bébés comprennent mieux ce qu'on dit quand on se sert de mots simples et qu'on les répète souvent. Mots simples, répétition, ton chantant... on dirait la description de plusieurs chansons d'enfants. En fait, les chansons ont une place privilégiée dans la communication avec les bébés, que ce soit à l'heure du jeu ou à l'heure du coucher. Elles continuent d'ailleurs à occuper un rôle important auprès des enfants plus grands.

## Ajouter des gestes

Les chansons qui comportent des gestes et du mouvement permettent aux enfants de participer, même avant de pouvoir prononcer les paroles. Prenons par exemple la chanson « Tête, épaules, genoux, orteils ». Au début, vous bougez les mains de votre bébé pour pointer les parties de son corps. Plus tard, votre enfant participera en imitant vos gestes. Graduellement, il sera de plus en plus capable d'ajouter des mots et bientôt il chantera toute la chanson avec vous.

## Rythme, rime et répétition

La musique et le chant développent l'écoute, composante essentielle de la communication. Les paroles qui sont importantes dans les chansons sont mises en valeur par le rythme et la rime. Plusieurs chansons ont un refrain répété qui aide les enfants à pratiquer et à se souvenir des mots et des phrases entières.

## Souligner le rythme

C'est au rythme de la musique que s'intéresse d'abord le jeune enfant. Peut-être qu'il lui rappelle le battement du coeur de sa mère, probablement un des premiers sons qu'il a entendu. Vous pouvez souligner le rythme en faisant sauter un bébé sur vos genoux ou en tapant dans les mains avec un bambin. Si le coeur vous en dit, pourquoi ne pas danser ensemble!

## Rendre l'apprentissage facile

Vous rendez l'apprentissage d'une nouvelle chanson plus facile en ralentissant le rythme. Attendez que votre enfant la connaisse mieux avant d'accélérer le rythme. Une fois la chanson bien connue, vous pouvez faire un petit arrêt pour laisser l'enfant chanter le prochain mot. Souvent, la rime aidera l'enfant à se rappeler le dernier mot du vers, par exemple.

## Apprendre des chansons

Si vous ne connaissez pas de chansons d'enfant, vous pouvez en apprendre à partir de cassettes empruntées à la bibliothèque. Prenez le temps de les écouter et les chanter avec les enfants. Peut-être que vous ne chanterez pas comme les professionnels, mais vous pouvez adapter les chansons à l'âge et aux intérêts de vos enfants, ce qu'une cassette ne peut jamais faire.

## Inventer des chansons

Quand un enfant entend son nom dans une chanson, son attention est attirée. Vous pouvez aussi inventer des paroles sur un air connu pour accompagner vos activités. Par exemple, quand vient l'heure du départ, essayez de chanter « L'heure du départ, au revoir » sur l'air de « Frère Jacques ». Certains enfants sont stressés à l'idée de passer d'une activité à une autre. Une chanson peut aider à maintenir la bonne humeur et à annoncer le changement prochain.

Parfois, une chanson fonctionne mieux qu'un ordre. Faites l'annonce du repas en chantant « Si tu as une très grande faim, viens manger » sur l'air de « Si tu aimes le soleil ».

## Des chansons pour toutes les occasions

Il existe des chansons pour toutes les occasions : pour décrire les activités de tous les jours, pour faciliter les routines, pour changer l'humeur et pour se détendre avant la sieste. Le partage de la musique est une façon de nouer des liens solides et d'ajouter de bons moments à la journée de tous, enfants et adultes.

*par Betsy Mann*

FRP Canada, 331, rue Cooper, bur. 707, Ottawa ON K2P 0G5 Tél : 1-866-637-7226 www.frp.ca